# முதலமைச்சர் தாராளமாக நிதி ஒதுக்கியதால் – தமிழ்நாட்டில்

# வேளாண்மைத் துறையில் எண்ணிலடங்காச் சாதனைகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன!

## சட்டப்பேரவையில் வேளாண்மை – உழவர் நலத்துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பெருமிதம்!

**சென்னை, ஏப். 5–**

**சட்டப்பேரவையில் வேளாண்மை – உழவர் நலத்துறை மானியக் கோரிக்கையில் பதிலுரையாற்றுகையில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், முதலமைச்சர் அவர்கள் தாராளமாக நிதி ஒதுக்கியதால் வேளாண்மைத் துறையில் எண்ணிலடங்கா சாதனைகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டதுடன் அடுக்கடுக்கான 25 அறிவிப்புகளை அறிவித்தார்.**

வேளாண்மை – உழவர் நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அளித்த பதிலுரை வருமாறு:

நாட்டு மக்களின் நாயகனாய், திராவிட முதல்வராய் வலம்வரும் எங்கள் இமயமே, மக்களின் இதயமே, மக்கள் முதல்வர் அவர்களுக்கு என் அன்பு வணக்கங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

துணை முதல்வராய், உத்திகள் பல வகுத்து, உறுதியுடன் வழிநடத்தி, உள்ளங்களை வென்றெடுத்த திராவிடச் செல்வருக்கு வாழ்த்துகளுடன்கூடிய வணக்கங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அவை உரிமையைக் காப்பேன் என்று அனைவருக்கும் எழுச்சியூட்டும் அருமையான அவைத் தலைவர் அவர்களுக்கும், அவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அவை முன்னவர் அவர்களுக்கும் அவை முன்னவர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மூத்த அமைச்சர்கள் கே.என். நேரு அவர்களுக்கும், வனத் துறை அமைச்சர் அவர்களுக்கும், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ. பெரியசாமி அவர்களுக்கும், பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு அவர்களுக்கும், இன்றைய தினம் இங்கே கதாநாயகனாக இருக்கின்ற வருவாய்த் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அவர்களுக்கும், எங்களது பெஞ்சில் அமர்ந்திருக்கும் அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், வேளாண்மைத் துறைக்கு தாராளமாக நிதி வழங்கியிருக்கும் நிதி அமைச்சர் அவர்களுக்கும், ஏனைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், பேரவையில் இருக்கின்ற பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, இந்தச் சட்டமன்றத்திற்கு என்னை ஐந்தாவது முறையாக அனுப்பி வைத்த குறிஞ்சிப்பாடி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த பட்ஜெட்டில் அதிக நேரம் பேச வேண்டியதில்லை. ஏனெனில், சுமார் ஒன்றே முக்கால் மணி நேரம் வேளாண்மை நிதிநிலை அறிக்கையை வழங்கி, பின்னர் அதற்கான பதிலுரையையும் வழங்கியுள்ளேன். எனவே, என்று நான் சொல்கிறேன். ஆனால், அவர்கள் உங்கள் ஆட்சியில் என்ன செய்தீர்கள், இந்த ஆட்சி என்ன செய்தது என்று எங்களைக் கேட்கிறார்கள். கடந்த ஆட்சியில் 47 விவசாயிகள் இறந்ததற்கு சுமார் 2 கோடியே 76 இலட்சம் ரூபாயை உங்கள் அரசாங்கமே நிவாரணமாகக் கொடுத்திருக்கிறது. ஆனால், எங்களுடைய ஆட்சியில், முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் வேளாண்மைத் துறைக்கு தாராளமாக நிதியொதுக்கி, எண்ணிலடங்காத சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. பொள்ளாச்சி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்கூட தென்னை சாகுபடி பாதிப்பு குறித்து எங்களை நம்பித்தான் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். தமிழகத்தில் 12 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் தென்னை சாகுபடி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

### விழிப்புணர்வு முகாம்கள்!

ஆனால், கடந்த காலங்களில் ஆட்சி புரிந்தவர்கள் தென்னைக்கென்று தனியாக எதுவும் செய்யவில்லை. தென்னை வாரியம் மூலமாகத்தான் அந்தத் திட்டங்களைக் கொண்டு வந்தார்கள். அதுவும் கூட சொற்ப அளவில் செய்தார்கள். கடந்த ஆட்சியில் தென்னையில் தீவிரமாகத் தாக்குதல் ஏற்பட்டது. கடந்த ஆண்டு அதற்கு ஏற்பட்ட தீவிரமான இன்னல்களை அறிந்து, நம்முடைய முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் கிட்டத்தட்ட 300-க்கும் மேற்பட்ட இடங்களில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தி நாங்கள் சாதனைகளைச் செய்துள்ளோம். தமிழ்நாட்டில் 12 இலட்சம் ஏக்கரில் தென்னை சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. இதில் 1 இலட்சத்து 90 ஆயிரம் ஏக்கரில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈக்கள் தாக்குதல் கண்டறியப்பட்டுள்ளது.

மாவட்டங்களில் கிட்டத்தட்ட 330-க்கும் மேற்பட்ட விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு, விவசாயிகளுக்கு உரிய பயிர் பாதுகாப்பு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. கேரள மாநிலம் காசர்கோட்டிலுள்ள மத்திய மலைப்பயிர்கள் ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானிகள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள், தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் கூட்டாக வயலாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த அடிப்படையிலே பல திட்டங்களைக் கடந்த ஆண்டு அந்தப் பகுதியிலே நடத்தி நிவாரணங்கள் வழங்கப்பட்டது அது தடுக்கப்பட்டது. ஆக, தீவிரமாகக் கண்காணிக்க, இன்னும் சொல்லப்போனால், அதை ஒன்றிய அரசு, வேளாண் துறை சார்ந்தவர் அதைக் கட்டுப்படுத்துவதற்கு என்ன சொன்னார் என்றால், அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி தாமதமாக வந்திருக்கிறார். முனைவர் பொள்ளாச்சி வி. ஜெயராமன்–சொன்னபிறகுதான் எல்லோரும் வருகிறார்கள்.

### ரூகோஸ் வெள்ளை ஈக்கள்!

ரூகோஸ் வெள்ளை ஈக்களை இரசாயன முறையில் கட்டுப்படுத்தினால், அது மேலும் பெருகும் தன்மையுடையதாகும். அது முனைவர் பொள்ளாச்சி வி.



ஆனால், இந்த அரசாங்கம் தீவிரமாக நடவடிக்கை எடுக்கிறது.

### சாகுபடி பரப்பளவு அதிகரிப்பு!

அடுத்ததாக, 'சாகுபடி பரப்பு அதிமுக ஆட்சியில் கூடுதலாக இருந்தது, உங்கள் ஆட்சியில் தெளிவாக இல்லை' என்று அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி கூறினார். அவர் குறைத்துக் காட்டியிருக்கிறார். 2019-2020-ல் 147 இலட்சம் ஏக்கர், அதேபோல, 2020-2021-ல் 152 இலட்சம் ஏக்கராகவும் இருந்த சாகுபடி பரப்பு இவ்வரசு பொறுப்பெற்றபின் தொலைநோக்குத் திட்டங்களின் காரணமாக 2021-2022-ல் 157 இலட்சம் ஏக்கராகவும், 2022-2023-ல் 155 இலட்சம் ஏக்கராக இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, 2022-2023, 2023-2024 ஆம் ஆண்டுகளில் குறைவான மழை பொழிவு, பருவம் தவறிய மழை, புயல், வெள்ளம் பல்வேறு இயற்கைச் சீற்றங்களால் 33 இலட்சம் ஏக்கர் பாதிப்பு ஏற்பட்டது. பாதிப்பு ஏற்பட்டும் கிட்டத்தட்ட 1,631 கோடி ரூபாய் நிவாரணமாக 20.83 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். சாகுபடி குறைந்தும் நிவாரணம் வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆயினும் கடந்த 2019-2020-ஐக் காட்டிலும் இவ்வரசு பொறுப்பேற்றவுடன் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக பயிர் சாகுபடி பரப்பு 5 இலட்சம் ஏக்கர் அதிகரித்து, 157 இலட்சம் ஏக்கராகவும், 2022-2023-ல் 155 இலட்சம் ஏக்கராகவும் அதிகரித்தே உள்ளது என்பதை நான் இந்த நேரத்தில் அவருக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

நெல் சாகுபடியிலும் கடந்த ஆட்சியைவிட, இந்த ஆட்சியில் நாங்கள் அதிகமாக உருவாக்கிக் கொடுத்திருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, மொடக்குறிச்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி மஞ்சளில் உள்ள குர்க்குமின் ஆலை அமைத்திட கோரிக்கை வைத்தார்கள். ஈரோட்டில் மஞ்சளுக்கு மெருகூட்டும் இயந்திரம் மற்றும் மஞ்சள் வேகவைக்கும் இயந்திரம் ஆகியவற்றுக்கு ரூ.1.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மதிப்புக் கூட்டும் மையம் அமைக்கும் தொழில்முனைவோர்களுக்கு அவர்களின் திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதம் அல்லது ரூ.1.5 கோடி மானியம் வழங்கப்பட்டு, தொழில்முனைவோர்கள் ஊக்குவிக்கப்பட உள்ளனர். குர்க்குமின் ஆலை அமைக்கும் தொழில்முனைவோர்கள் இதனை பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய தோழர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறீர்கள். 183 வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நிதிநிலை அறிக்கையிலும் அறிவித்திருக்கின்றோம். பதிலுரையிலும் அறிவித்திருக்கின்றோம். மீதமுள்ளவற்றை நாங்கள் ஆராய்ந்து, அதற்குரிய நிதியைப் பெற்று—, இன்னும் சொல்லப்போனால், இந்த நிதிநிலை அறிக்கையே மக்களுடைய, விவசாயிகளுடைய கருத்தைக் கேட்டு, உருவான நிதிநிலை அறிக்கை. அதனால்தான் தமிழகம் முழுவதும் விவசாயிகள் பாராட்டுகின்றார்கள். விவசாய சங்கங்கள் எல்லாம் மகிழ்ச்சியுடன் முதலமைச்சரைச் சந்தித்து வாழ்த்துகளையும், நன்றியினையும் தெரிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நீங்கள் கட்சி நடத்துவதற்காக எதிர்க்கட்சி கொறடா குறை சொல்லலாம். ஆனால், குறை சொல்வதற்கு வாய்ப்பும் இல்லை. தென்னை மரத்தைப் பொறுத்தவரை, அது மென்மையான பயிர். இப்போது வைத்தது கிடையாது. அவர்களின் தாத்தா, அப்பா காலத்தில் வைத்த தென்னை மரம். ஆகவே, அது வயதான மரம். எனவே, அது சுலபமாக பாதிக்கக்கூடியது. மேலும், கடந்த 10, 15 ஆண்டுகளாக ஏற்பட்டிருக்கக்கூடிய நோய். ஆகவே, அது 10 ஆண்டு காலம் அல்லது அதற்கு முன்னால் வந்த நோய். இப்போது, அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக எடுக்கப்பட்டு, இந்த ஆண்டு அதற்கு 36 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்ற செய்தியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## 20.83 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.1631 கோடி நிவாரண உதவி!

மேலும் காலத்தை எடுத்துக்கொள்வது நாகரிகமல்ல. இருந்தாலும், இந்த மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பேசிய 8 சட்டமன்ற உறுப்பினர்களும், பலர் ஆட்சியின் சாதனைகளைச் சொன்னார்கள். ஆனால், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் குறை சொல்ல வேண்டுமென்றே குறை சொன்னார்கள். அவ்வாறு குறை சொன்ன உறுப்பினர் அக்ரி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தற்போது இங்கு இல்லை. அவர் வேளாண் பல்கலைக்கழகத்தின்மீது மிகுந்த அக்கறையோடு பேசினார். விவசாயம் தொடர்பான நல்ல ஆலோசனைகள் எதையும் சொல்லவில்லை. அதேபோன்று, நம்முடைய பொள்ளாச்சி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களும் பேசினார். அவரும் தற்போது இங்கு இல்லை. இரண்டுபேரும்தான் நேற்று பேசினார்கள். அவர்கள் இருவருமே தற்போது இங்கு இல்லை. அவர்கள் இரு வரும் விவசாயத்தின்மீது அக்கறை இருக்கிறதா, என்ன செய்தீர்கள் என்று கேட்டார்கள். இன்னும் சொல்லப்போனால், இந்தப் பேரவையின் துணைத் தலைவராக இருந்து வழிநடத்திய பொள்ளாச்சி சட்டமன்ற உறுப்பினர் அவர்களே இந்த வேளாண்மைத் துறை என்ன செய்தது என்று கேட்கிறார். நாங்கள் என்ன செய்தோம் என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும்.

### அ.தி.மு.க. ஆட்சியில் விவசாயிகள் தற்கொலை!

ஆனால், விவசாயிகள் தற்கொலை தான் உங்கள் ஆட்சிக் காலத்தின் சாதனை என்று சொல்லலாம். அதாவது, உங்கள் ஆட்சியில் 47 விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டார்கள் ஜெயராமன் அவர்களுக்கும் தெரியும். ரூகோஸ் வெள்ளை ஈக்களை இரசாயன முறையில் கட்டுப்படுத்தினால் அது மேலும் பெருகும் தன்மையுடையதாகும். பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்த மத்திய பூச்சிக் கொல்லி தரக் கட்டுப்பாடு கழகம் தடை விதித்துள்ளது. எனவே, இயற்கை முறை மற்றும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கடைபிடித்தால் மட்டுமே இப்பூச்சி பெருகுவதைத் தடுக்கமுடியும். இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி முடிவுகளின்படி, விளக்குப்பொறி எக்டருக்கு ஒன்று, மஞ்சள் ஒட்டும் பொறி ஏக்கருக்கு 20 எண்கள், என்கார்சியா ஒட்டுண்ணி, தோப்புக்கு 100 எண்கள், பச்சைக் கண்ணாடி இறக்கை பூச்சி (அப்பர்டொகிரைசா), ஏக்கருக்கு 400 எண்கள். 0.5 சதவீத வேப்பெண்ணெய் கரைசல் தெளித்தல் ஆகியவை இப்பூச்சியினை திறம்படக் கட்டுப்படுத்தும். இதுதவிர, வாய்ப்புள்ள இடங்களில், ஓலைகளின் அடியில் படுமாறு தண்ணீரை வேகமாகப் பீய்ச்சி அடித்தும் கட்டுப்படுத்தலாம். எனவே, மேற்கண்ட முறைகளை பின்பற்றி தற்போது தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈக்கள் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதனால், இதைப் பெரிதுபடுத்தாமல்–நாங்களும் உடனுக்குடன் செய்கிறோம். இன்றுகூட வேளாண் விஞ்ஞானிகளை வரவழைத்து மீண்டும் ஆய்வு செய்து தீவிரமாகக் கட்டுப்படுத்தப்படும். இந்த நடவடிக்கைகள் எல்லாம் முனைவர் பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுக்குத் தெரியும். இருப்பினும், அதைப் பேசி பெரிதுபடுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் அவர்கள் பேசுகின்றார்.

### அறிவிப்புகள்

வேளாண்மை–உழவர் நலத் துறை

**1. வேளாண்மை– உழவர் நலத் துறையின் அனைத்துத் திட்டங்களையும் ஆலோசனைகளையும், தரமான வேளாண் இடுபொருட்களையும் விவசாயிகள் ஒரே இடத்தில் பெற்றுப் பயனடைய ஏதுவாக ஏழு ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள், 25 கோடியே 3 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்**

வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், வேளாண்மைப் பொறியியல் ஆகிய துறைகளின் திட்டங்கள் குறித்த விவரங்களையும், துறை சார்ந்த ஆலோசனைகளையும் ஒரே குடையின்கீழ் விவசாயிகளுக்கு வழங்குவதற்கும், முக்கியப் பயிர்களின் சான்றளிக்கப்பட்ட விதைகள் உள்ளிட்ட வேளாண் இடுபொருட்களை விவசாயிகளுக்கு எளிதில் விநியோகிக்கவும் வட்டார அளவில் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

## ஏழு ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள்!

இதன் தொடர்ச்சியாக, 2025-26 ஆம் ஆண்டில், விழுப்புரம் மாவட்டம் மயிலம், கண்டமங்கலம், விருதுநகர் மாவட்டம் திருச்சுழி, புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி, கன்னியாகுமரி மாவட்டம் மேல்புரம், ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர், கிருஷ்ணகிரி மாவட்டம் தளி ஆகிய ஏழு இடங்களில் 250 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட விதை சேமிப்புக் கிடங்குகளுடன்கூடிய ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் 25 கோடியே 3 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்.

**2. இரசாயன உரங்களின் தரத்தினை ஆய்வு செய்து விவசாயிகளுக்குத் தரமான உரங்கள் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில் திருநெல்வேலி, கடலூர் ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு உரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் ஆறு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்**

தமிழ்நாட்டில் பயிர் சாகுபடிக்குப் பயன்படுத்தப்படும் இரசாயன உரங்களை ஆய்வு செய்து அவற்றின் தரத்தினை உறுதி செய்யும் வகையில் ஆண்டுக்கு சுமார் 27,000 உர மாதிரிகள் எடுக்கப்பட்டு 17 உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்களில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. இந்தப் பகுப்பாய்வுப் பணிகளை மேலும் அதிகரித்து தரமான உரங்களை விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்யும் நோக்கத்துடன், 2025-26 ஆம் ஆண்டில், திருநெல்வேலி, கடலூர் ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு உரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் ஆறு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்.

**3. வேளாண் விளைபொருட்களில் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்பினைக் குறைத்து சேமிப்புக் காலத்தை நீட்டிக்கும்வகையில் திசையன்விளை, மானாமதுரையில் குளிர்பதனக் கிடங்கு வசதிகள் நான்கு கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்**

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளையில் உற்பத்தியாகும் நெல்லி, முருங்கை, மாம்பழம், பயறு வகைகள், சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் உற்பத்தியாகும் மிளகாய் மற்றும் இதர காய்கறிகள் போன்ற வேளாண் விளைபொருட்களைச் சேமித்து இருப்புக் காலத்தை நீட்டித்து, ஏற்றுமதி வாய்ப்பினை உருவாக்கி, விவசாயிகளுக்கு உரிய விலை கிடைத்திட ஏதுவாக, 2025-26 ஆம் ஆண்டில், திசையன்விளை, மானாமதுரையில், தலா 200 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட இரண்டு குளிர்பதனக் கிடங்குகள் நான்கு கோடிரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**4. தரமான விதைகள் உள்ளிட்ட வேளாண் இடுபொருட்கள் விவசாயிகளுக்கு அருகாமையில் கிடைக்கச் செய்யும் வகையில் குறுவட்ட அளவில் செயல்படும் ஐந்து துணை வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு மூன்று கோடியே 58 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் விதை சேமிப்புக் கிடங்குகளுடன்கூடிய புதிய கட்டடங்கள் அமைக்கப்படும்**

குறுவட்ட அளவில் செயல்பட்டுவரும் துணை வேளாண்மை விரிவாக்க மையங்களில் நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துப் பயிர்களின் உயர் விளைச்சல் இரகங்களின் சான்றளிக்கப்பட்ட விதைகள் மற்றும் இதர முக்கிய வேளாண் இடுபொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

2025-26 ஆம் ஆண்டில், திருவாரூர் மாவட்டம் இடும்பாவனம், திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர், திருவள்ளூர் மாவட்டம் போந்தவாக்கம், தஞ்சாவூர் மாவட்டம் தஞ்சாவூர் டவுன், ஈரோடு மாவட்டம் கள்ளிப்பட்டி ஆகிய 5 இடங்களிலுள்ள துணை வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு, 110 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட விதை சேமிப்புக் கிடங்குகளுடன்கூடிய புதிய கட்டடங்கள் மூன்று கோடியே 58 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்.

**5. வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களைப் பாதுகாப்பாக வைத்து, வட்டார அளவில் விவசாயிகளுக்கு சேவை வழங்கிட ஏதுவாக வேளாண் இயந்திரக் கூடாரங்கள் 15 வட்டாரங்களில் மூன்று கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்**

விவசாயிகள் பல்வேறு வேளாண் பணிகளைக் காலத்தே மேற்கொள்ள உதவிடும் வகையில், வேளாண்மைப் பொறியியல் துறையின் வேளாண் இயந்திரங்கள், உபகரணங்கள் வட்டார அளவில் உழவர்களுக்கு இ-வாடகை செயலியின்மூலம் குறைந்த வாடகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அவ்வியந்திரங்களையும், உபகரணங்களையும் பாதுகாப்பாக வைக்கவும், பழுதுகள் ஏற்படின் அவற்றை உடனுக்குடன் நிவர்த்தி செய்யவும்,

2025-26 ஆம் ஆண்டில், 15 வட்டாரங்களில் வேளாண் இயந்திரக் கூடாரங்கள் ஒவ்வொன்றும் ரூபாய் 22 இலட்சம் வீதம் மொத்தம் மூன்று கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**6. தமிழ்நாட்டில் உள்ள 386 ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்களில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் சேவைகளை மேம்படுத்தவும் அவற்றைக் கண்காணிக்கவும் கண்காணிப்புக் கேமராக்கள் மற்றும் மின்னணு வருகைப் பதிவேடு இயந்திரங்கள் இரண்டு கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்**

தமிழ்நாட்டில் செயல்படும் 386 ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்களில் வேளாண் பயிர் இரகங்களின் தரமான சான்றுபெற்ற விதைகள், உயிர் உரங்கள் உள்ளிட்ட முக்கிய வேளாண் இடுபொருட்கள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுவதுடன், அரசின் திட்டங்கள் குறித்த விவரங்களும், வேளாண் தொழில்நுட்ப ஆலோசனைகளும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

எனவே, 386 ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்களில் விவசாயிகளுக்குக் கிடைத்திடும் வேளாண் விரிவாக்க சேவையை மேம்படுத்தவும் அதனைத் திறம்படக் கண்காணிக்கவும் ஏதுவாக, 2025-26 ஆம் ஆண்டில் கண்காணிப்புக் கேமராக்கள் மற்றும் மின்னணு வருகைப் பதிவேடு இயந்திரங்கள் இரண்டு கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**7. விவசாயிகளுக்குத் தரமான உயிரியல் பூச்சிக்கொல்லிகள் கிடைப்பதை உறுதி செய்திடும் வகையில், தஞ்சாவூரில் இயங்கி வரும் உயிரியல் பூச்சிக்கொல்லி உற்பத்தி மையத்தில் புதிய கட்டடம் ஒரு கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்**

இயற்கை வேளாண்மையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு, பயிர்களில் அவ்வப்போது ஏற்படும் பூச்சி, நோய்த் தாக்குதல்களைக் கட்டுப்படுத்திட, போதுமான அளவு தரமான உயிரியல் பூச்சிக்கொல்லிகள் கிடைப்பதை உறுதி செய்திடும் வகையில், 2025-26 ஆம் ஆண்டில், தஞ்சாவூரில் செயல்பட்டுவரும் உயிரியல் பூச்சிக்கொல்லி உற்பத்தி மையத்தின் செயல்பாடுகளை வலுப்படுத்த புதிய கட்டடம், ஒரு கோடியே 85 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் கட்டப்படும்.

இவ்வாறு 22 அறிவிப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**8. காய்கறி நாற்றுகளை அதிக அளவில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கும்பொருட்டு தோட்டக்கலைத் துறையின்மூலம் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நாற்றங்கால் கட்டமைப்புகள் விரிவுபடுத்தப்படும்**

விவசாயிகளுக்குத் தரமான காய்கறி நாற்றுகளை உற்பத்தி செய்து தங்குதடையின்றி வழங்குவதற்காகவும், ஆண்டுதோறும் தரமான காய்கறி நாற்றுகள் இருப்பினை உறுதி செய்திடவும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் நாற்றங்கால் கட்டமைப்புகளை அமைப்பது இன்றியமையாததாகும். ஆண்டு முழுவதும் குழித்தட்டு காய்கறி நாற்றுகளை விவசாயிகளுக்குச் சீராக வழங்குவதற்காக, 2025-26 ஆம் ஆண்டில், திண்டுக்கல், திருப்பூர், செங்கல்பட்டு, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் தோட்டக்கலைத் துறையால் ஒரு கோடி ரூபாய் நிதியில் நான்கு உயர் தொழில்நுட்ப நாற்றங்கால்கள் அமைக்கப்படும்.

**9. அதிக வரத்துக் காலங்களில் மாம்பழங்கள் வீணாவதைத் தடுத்து, விவசாயிகள் அதிக வருமானம் பெற ஏதுவாக, வங்கிக் கடன் உதவியுடன் மாம்பழக் கூழ் தயாரிப்புக் கூடம் அமைக்க எட்டு நபர்களுக்கு தலா ரூ.12.25 இலட்சம் வீதம் மானியம் வழங்க 98 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்**

தமிழ்நாட்டில் மாம்பழ உற்பத்திப் பருவத்தில், அதிக வரத்தின்போது விலை குறைவதோடு, பழங்கள் வீணாகும் நிலை ஏற்படுகிறது. மேலும், தமிழ்நாட்டில் விளையும் மாம்பழ இரகங்களிலிருந்து தயாரிக்கப்படும் மாம்பழக் கூழ், உலகளவில் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது. எனவே, 2025-26 ஆம் ஆண்டில், வங்கிக் கடன் உதவியுடன், மாம்பழக் கூழ் தயாரிப்புக்கூடம் அமைத்திட எட்டு தொழில்முனைவோருக்கு 35 சதவீத மானியம், அதிகபட்சமாக ஒரு நபருக்கு 12.25 இலட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படும். இத்திட்டத்திற்கென, 98 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**10. விவசாயிகளின் வயல்களுக்கு நேரடியாகச் சென்று மண் மாதிரிகளைச் சேகரித்து, ஆய்வு செய்து மண்வள அட்டைகளுடன், பயிர்களுக்கேற்ப உரப் பரிந்துரைகள் வழங்கும் வகையில் 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய நடமாடும் மண் பரிசோதனை நிலையம் சேலம் மாவட்டத்தில் அமைக்கப்படும்**

தமிழ்நாட்டில் வேளாண்மைத் துறையின்கீழ் செயல்பட்டுவரும் நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள், கிராமங்களுக்கே நேரடியாகச் சென்று, விவசாயிகளின் வயல்களில் மண் மாதிரிகளைச் சேகரித்து, ஆய்வுசெய்து மண்வள அட்டைகளுடன், பயிர்களுக்கேற்ப உரப் பரிந்துரைகளையும் விவசாயிகளுக்கு வழங்குகின்றன.

2025-26 ஆம் ஆண்டில், சேலம் மாவட்ட விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, புதிய நடமாடும் மண் பரிசோதனை நிலையம், சேலம் மாவட்டத்தில் 75 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்.

**11. சிறு, குறு விவசாயிகளின் சிறிய இயந்திரங்களுக்கானதேவையினைக் கருத்தில்கொண்டு, புதிய, நவீன வேளாண் இயந்திரங்கள், கருவிகள், உபகரணங்களைஅரசுஇயந்திரக் கலப்பை பணிமனைகளில் உருவாக்கி, அவை குறித்து விவசாயிகளுக்குச் செயல் விளக்கங்கள் அளிக்கப்படும். இதற்கென 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்**

இணைப்புகளுக்கேற்ற புதிய வேளாண் இயந்திரங்கள், கருவிகள், உபகரணங்களின் பயன்பாடுகள் குறித்த பல்வேறு தகவல்கள் கிடைக்கப்பெறுகின்றன. இத்தகைய புதிய, நவீன வேளாண் இயந்திரங்கள், கருவிகள், உபகரணங்கள், பண்ணைக் குட்டைகளிலிருந்து பாசனத் திற்கான நீரினை இறைத்திட, உழவர்களுக்கு உதவிடும் வகையில், "டிராக்டர் டிரெய்லருடன் பொருத்தப்பட்ட சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டு அமைப்பு" போன்றவை 30 இலட்சம் ரூபாய் செலவில் வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரக் கலப்பை பணிமனைகளில் 2025-26 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டு, அவற்றின் பயன்பாடு குறித்து விவசாயிகளுக்குச் செயல் விளக்கங்கள் காண்பிக்கப்படும். இதன் வாயிலாக, சிறு, குறு விவசாயிகள் சிறிய இயந்திரங்களைப் பயன்படுத்தும் வாய்ப்பினைப் பெறுவார்கள்.

**12. விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் உரிய நேரத்தில் கிடைக்க ஏதுவாக, சேலத்தில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறை வளாகத்தில் புதிய வேளாண் இயந்திரங்கள் பழுது நீக்க மையம் 30 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்**

தொடர்ச்சி 13–ஆம் பக்கம்